பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 12 வியாழக்கிழமை 28.08.2025 | அதிர்வு 28

## ரணில் தொடர்ந்தும் தீவிர சிகிச்சையில்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர

04▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# இந்தோனேசியாவில் கூண்டோடு சிக்கிய பாதாள உலகக் குழு

## இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை

இலங்கையில் இடம்பெற்ற பல குற்றச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட 6 பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இந்தத் தகவலை இன்று காலை உறுதிப்படுத்தியுள்ளார்.

கெஹெல்பத்தார பத்மே, கொமாண்டோ சலிந்த, பாணந்துறை நிலங்க உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலகக் குழு உறுப்பினர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்ணொருவரும் உள்ளடங்குகின்றார்.

இலங்கைப் பொலிஸார் மற்றும் சர்வதேசப் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையின் பிரகாரம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

04▶

# ரணிலைச் சந்தித்தாரா ஹரிணி?

## வைத்தியசாலையின் சி.சி.ரி.வி. கமராக்களை சோதனை செய்ய சி.ஐ.டிக்கு நீதிவான் அனுமதி



பிரதமர் ஹறிணி அமரசூரிய, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சென்றார் என்று சமூக ஊடகங்களில் பரவும் பதிவுகள் தொடர்பான விசாரணைகளுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சி.சி.ரி.வி. கமராக்களைச் சோதனை செய்வதற்கு மாளிகாகந்த நீதிவான், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

04▶



# இ.போ.ச. தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தம்

(எஸ்.நிதர்ஷன்)

தனியார் பஸ்களுடன் கூட்டு நேர அட்டவணையில் பஸ்களை இயக்கும் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வேறு சில கோரிக்கைகளை முன்வைத்தும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பல தொழிற்சங்கங்கள் இன்று அதிகாலை முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

அதற்கு ஆதரவு தெரிவித்து, யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும், அனைத்து தரப்பினரின் கருத்துக்களின் அடிப்படையிலேயே கூட்டு நேர அட்டவணை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பி.ஏ. சந்திரபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இணைந்த நேர அட்டவணை மூலம் அரசு, இலங்கை போக்குவரத்துச் சபையைக் கலைக்க முயற்சிக்கின்றது என்று ஐக்கிய தொழிற்சங்க அழைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தொழிற்சங்கங்கள் முன்வைத்த பெரும்பாலான கோரிக்கைகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதால், வேலைநிறுத்தம் நியாயமற்றது என்றும், அரசைச் சிரமப்படுத்தும் ஒரே நோக்கத்துடன் தொழிற்சங்க நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அனைத்து போக்குவரத்து சபை சாரதிகளையும் கடமைக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு செய்யத் தவறி தொழிற்சங்க நடவடிக்கையில் பங்கேற்பவர்களை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதிப் போக்குவரத்து அமைச்சர் அறிவித்துள்ளார்.








# ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் கையொப்பத்துடன் 'நீதியின் ஓலம்' ஐ.நாவுக்கு

## வடக்கின் இணைப்பாளர் ஜெயசித்திரா தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தமிழ் மக்களின் கையொப்பத்துடன் ”நீதியின் ஓலம்” ஐ.நா.வுக்குச் செல்லவுள்ளது என்று தாயகச் செயலணி அமைப்பின் வடக்குக்கான இணைப்பாளர் ஜெயசித்திரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து ”நீதியின் ஓலம்” கையொப்பப் போராட்டம் கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு, கிழக்கில் ஆரம்பமானது.

இந்தப் போரட்டத்தின் பிரதான நிகழ்வு மனிதப் படுகொலையின் புதைகுழிச் சாட்சியான யாழ்ப்பாணம் – செம்மணியில் ஆரம்பமாகி இன்று முற்பகல் 10.30 மணிக்கு அதே இடத்தில் நிறைவுற்றது.

தாயகச் செயலணி அமைப்பினரால் தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரலை வலியுறுத்தி கடந்த 5 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட ‘நீதியின் ஓலம்’ எனும் கையொப்பப் போராட்டம் இன்றுடன் நிறைவுக்கு வந்தது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கின் பல்வேறு பிரதேசங்களில் மக்களின் கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டன.

இந்தக் கையொப்பப் போராட்டத்தில் சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்துக்கு அதிகமானோர் கையொப்பமிட்டிருந்தனர்.

முன்பதாக கடந்த ஐந்து நாட்களாகத் தமிழர் தாயகமெங்கும்

முன்னெடுக்கப்பட்ட இந்தக் கையொப்பப் போராட்டத்தி ஊடாக இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி உட்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் முழுமையான சர்வதேச நீதிவிசாரணை நடைபெற வேண்டும் என்பதுடன் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீது வலுவான தீர்மானம் கொண்டு வந்து, அனைத்து நாடுகளும் தெளிவான நிலைப்பாடு எடுக்க வேண்டும் எனவும் இந்தப் போராட்டம் வலியுறுத்துகின்றது.” – என்றார்.










# கல்முனை மாநகர சபை ஊழியர் இ.போ.ச. பஸ் மோதி உயிரிழப்பு

(அஸ்லம் எஸ். மௌலானா)

கல்முனை மாநகர சபையில் காவலாளியாகக் கடமையாற்றும் டேவிட் பாஸ்கரன் (வயது 56) வீதி விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இவர் தனது இரவு நேரக் கடமையை முடித்துக் கொண்டு இன்று வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், மருதமுனை மக்கள் மண்டபம் முன்பாக நேர் எதிரே வந்த இ.போ.ச. பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானபோது அதே இடத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.






சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

2001ஆம் ஆண்டு கல்முனை மாநகர சபையில் காவலாளியாக நிரந்தர நியமனம் பெற்ற டேவிட் பாஸ்கரன், சுமார் 24 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ளார். கடமையில் பொறுப்புணர்வு மற்றும் அர்ப்பணிப்பு மிக்கவராகக் காணப்பட்ட இவர் கல்முனை மாநகர சபையின் சிறந்த ஊழியர் என்ற பாராட்டையும் பெற்றுள்ளார்.

# புதிய அரசு ஆட்சிக்கு வந்ததும் பாதாள உலகக் குழு பலவீனம்

## பொலிஸ்மா அதிபர் பிரியந்த தெரிவிப்பு

"இலங்கையில் புதிய அரசு வந்ததும் பாதாள உலகக் கும்பலின் சக்தி பலவீனமடைந்துள்ளது. இந்தப் புதிய அரசு பொலிஸாருக்கு வழங்கிய உதவிகளால் இந்தோனேசியாவில் தலைமறைவாக இருந்த பாதாள உலகக் கும்பலின் 6 உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்."

- இவ்வாறு பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய அரசு வந்ததும் பாதாள உலகக் கும்பலின் சக்தி பலவீனமடைந்தது. இதனால்தான் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த அனைவரும் நாட்டை விட்டுத் தப்பிச் சென்று வெளிநாட்டில் தலைமறைவாக உள்ளனர்.

முன்னர் பாதாள உலகக் கும்பல்களுக்கு பல அரசியல்வாதிகள் துணை புரிந்தனர். எனவேதான் பாதாள உலகக் கும்பல்கள் எமது நாட்டில் பல குற்றச் செயல்களை மேற்கொண்டு பலத்துடன் இருந்தனர். ஆனால், புதிய அரசு வந்ததும் பாதாள உலகக் கும்பலின் சக்தி பலவீனமடைந்தது.

பாதாள உலக கும்பல்களைக் கைது செய்ய புதிய அரசு பொலிஸாருக்கு பல உதவிகளை வழங்கியது.

பல அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களைத் தாண்டி இந்தக் கைது நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் காலங்களிலும் இந்தக் கைது நடவடிக்கைகள் தொடரும்." - என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ரணிலைச் சந்தித்தாரா?

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்யுமாறு மாளிகாகந்த நீதிவான், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சென்றார் என்று சமூக ஊடகங்களில் பரவும் பதிவுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள், மாளிகாகந்த நீதிவானிடம் இன்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சி.சி.ரி.வி. கமராக்களைச் சோதனை செய்ய அனுமதி வழங்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

### ரணில் தொடர்ந்தும்...

சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன இந்தத் தகவலை இன்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருந்து வெளியேறுவதும், தொடர்ந்து சிகிச்சை பெறுவதும் அவர் மற்றும் அவரது குடும்பத்தினரின் முடிவைப் பொறுத்தே உள்ளது.

எவ்வாறிருப்பினும், ரணில் விக்கிரமசிங்கவை வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றுவது குறித்து வைத்தியர்கள் இன்னும் தீர்மானிக்கவில்லை." - என்றார்.

### இந்தோனேசியாவில்...

இவர்களில் பிரதான குற்றவாளியான கெஹெல்பத்தர பத்மே, மலேசியாவில் இருந்து தப்பிச் சென்று இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் பதுங்கியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த 6 பேர் மீதும் கொலை, போதைப்பொருள் கடத்தல், கொள்ளை உள்ளிட்ட பல தீவிர குற்றங்கள் தொடர்பான வழக்குகள் நிலுவையில் உள்ளன.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற பல குற்றச் செயல்களை இவர்கள் வெளிநாடுகளில் பதுங்கி இருந்து வழிநடத்தியுள்ளனர் எனக் கடந்த காலங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவர்களில் பெண் தவிர ஏனைய ஐவரும் சிவப்பு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டுள்ள 6 பாதாள உலகக் குழு உறுப்பினர்களையும் ஓரிரு நாட்களில் இலங்கைக்குக் கொண்டு வருவதற்குரிய பேச்சு இடம்பெற்று வருகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அவர்கள் இங்கு வந்த பின்னர் அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மோடி அரசின் பதிலடி!

தனது வலிமையான - உலகளாவிய - பொருளாதார மற்றும் நிதிச் செல்வாக்கை அல்லது மேலாண்மையை வைத்துக் கொண்டு உலக நாடுகளுக்கு வரி விதிப்பு மிரட்டலை விடுத்து வரும் டொனால்ட் டிரம்பின் அமெரிக்க நிர்வாகத்திற்கு சத்தம் சந்தடி இல்லாமல் தன்னுடைய உறுதியான நிலைப்பாடு மூலம் இந்தியப் பிரதமர் மோடியின் அரசாங்கம் சரியான பதிலடி கொடுத்திருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

அமெரிக்காவின் வரி உயர்வு மிரட்டலுக்கு இந்தியா அடிபணியாது என்று திட்டவட்டமாகவும் தெளிவாகவும் கடந்த 15 ஆம் திகதியே டெல்லி செங்கோட்டையில் இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தின விழாவில் இந்தியத் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுகையில் பிரதமர் மோடி தெரிவித்து விட்டார்.

ரஷ்யாவிடம் இருந்து மசகு எண்ணை மற்றும் இராணுவ சாதனங்கள் ஆகியவற்றை இந்தியா கொள்வனவு செய்வதற்கு எதிராக இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு 25 சதவீத மேலதிக வரியை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். இந்தக் கூடுதல் வரிவிதிப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது. அதன்படி நேற்றுத் தொடக்கம் அமெரிக்காவில் இறக்குமதியாகும் இந்தியப் பொருள்களுக்கான வரிவிதிப்பு ஐம்பது வீதமாக உயர்ந்தது. ஆனால் மோடியின் நிர்வாகம் அசந்து போய்விடவில்லை.

மாறாக, அமெரிக்க வரி விதிப்பு மிரட்டல்களுக்கு எல்லாம் அடங்காமல் - ஆரவாரம் இல்லாமல் - அந்த நடவடிக்கைகளைக் கனகாத்திரமாக எதிர்கொள்ளும் புதுடில்லியின் போக்கால் அசந்து போன அமெரிக்கா புதுவிதமான குற்றச்சாட்டுகளை இப்போது இந்தியா மீது அடுக்கத் தொடங்கி இருக்கின்றது.

ரஷ்யாவிடமிருந்து இந்தியா குறைந்த விலையில் தாராளமாக எரிபொருளை கொள்வனவு செய்வதுதான் ரஷ்யாவை ஆக்கிரமிப்புக்குத் தூண்டி வருகிறது என்று கூறியுள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்பின் அதிகாரபூர்வ அலுவலகமான வெள்ளை மாளிகையின் ஆலோசகர் பீட்டர் நவேரா, அதன் காரணமாக உக்கிரேனில் நடைபெறும் யுத்தம் ‘மோடியின் போர்’ என்று விவரிக்கத் தொடங்கி இருக்கிறார்.

“ரஷ்யாவிடமிருந்து எண்ணை வாங்குவதை நிறுத்தினால் இந்தியா மீதான வரியை 25 சதவீதம் குறைப்போம். இந்தியர்கள் இந்த விவகாரத்தில் மிக மிகவும் திமிர் பிடித்தவர்களாக இருக்கின்றமை எனக்குக் கவலை அளிக்கிறது.” - என்று அவர் கூறியிருக்கிறார்.

ஆனால், ‘எங்களுக்கு வசதியான - விலை குறைந்த -.இடங்களில் இருந்து எரிபொருள் இறக்குமதிகளை நாங்கள் செய்வோம். அது தொடர்பான முடிவை எடுப்பது எங்கள் இறையாண்மை. அது விடயத்தில் இன்னொரு நாட்டின் அழுத்தத்திற்கு இடம் அளிக்க முடியாது’ என்று மோடி அரசு திட்டவட்டமாகப் பதில் கூறி, தெளிவாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

அது மாத்திரமில்லாமல் அமெரிக்க வரி விதிப்புத் தொடர்பாக, அமெரிக்காவுக்கு பாதிப்பு தரக்கூடிய சில நகர்வுகளை சத்தம் சந்தடியின்றி மோடி அரசு தொடங்கி இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அமெரிக்கா சிறிய பார்ஸல்கள் மூலம் தன்னுடைய பொருள்களை பெருமளவில் இந்தியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. பல அமெரிக்க நிறுவனங்கள் இத்தகைய தனித்தனி ஏற்றுமதிகள் மூலம் வருமானத்தைத் திரட்டி வருகின்றன. பதிலடியாக இப்போது அமெரிக்காவில் இருந்து அத்தகைய தபால் அஞ்சல்கள் மூலமான வர்த்தகத்துக்கு தடை விதித்துள்ளது மோடி அரசு. இந்தியா மாத்திரம் அல்ல, அது போன்ற 25 நாடுகள் இத்தகைய தபால் மூலமான அமெரிக்க வர்த்தகத்துக்கு தடை விதித்திருப்பதன் மூலம் அமெரிக்காவில் சிறிய பொருள்களின் உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கின்ற பல்லாயிரம் நிறுவனங்களை நெருக்கடிக்குள் தள்ளி இருக்கின்றன.

ஒரே சமயத்தில் வலிமையான பல நாடுகளுடன் வரி விதிப்பு என்ற பொருளாதார யுத்தத்தை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பிரகடனப்படுத்தி இருக்கின்றமை, இந்தியா, ரஷ்யா, பிரேசில், சீனா போன்ற பல பெரிய நாடுகளை அமெரிக்காவுக்கு எதிராகப் பொருளாதார மோதலுக்காக ஒன்றிணைய வைத்திருக்கின்றது என்பதுதான் இப்போதைய கள யதார்த்தமாகும்.

டொனால்ட் ட்ரம்ப்பின் திமிர் பிடித்த அமெரிக்க நிர்வாகம், அளவுக்கு மீறித் துள்ளி குதித்துத் தன் தலையில் தானே மண்ணள்ளிப் போடும் வேலையை செய்து கொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

இந்தியாவின் மோடி நிர்வாகம் ஆர்ப்பாட்டம் இல்லாமல் - ஆரவாரம் இல்லாமல் - அதே நேரம் மிகவும் திடசங்கற்பத்தோடும் உறுதியோடும் ட்ரம்பின் கோமாளித்தனத்திற்கு நல்ல பதிலடி கொடுத்து வருவதாகவே தெரிகிறது.

# எந்தவொரு விடயம் அழிக்கப்படுகின்றதோ அதைக் காக்கவே அமைப்புகள் உருவாகின்றன

## வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு



எந்தவொரு விடயம் அழிக்கப்படுகின்றதோ அல்லது கால ஓட்டத்தில் மறைந்து செல்கின்றதோ அதைத் தக்க வைப்பதற்கும் அடுத்த சந்ததிக்கு ஒப்படைப்பதற்காகவும்தான் தினங்கள், அமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. அதைப்போலத்தான் நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பையும் நான் பார்க்கின்றேன். காலத்துக்கு தேவையான அமைப்பு. பொருத்தமான இடத்திலிருந்து பொருத்த மானவர்களால் தொடக்கப்பட்டு நடை போடுகின்றது.

இவ்வாறு புகழாரம் சூட்டினார் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்.

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பின் பரிசளிப்பு நிகழ்வும் ஆண்டு விழாவும், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் அமைப்பின் இணைத் தலைவரும் முன்னாள் பிரதம செயலருமான இ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பண்பாட்டு கலைக்கூடலின் மாணவர்களால் பண்ணிசை, கோலாட்டம் என்பன நடத்தப்பட்டன. அத்துடன் யாழ்ப்பாணம், வலிகாமம் வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், முனைவர் திருநாவுக்கரசு கமலநாதனின் 'பொழிலும் பொலிவும்' நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. காலைக் கதிர் பத்திரிகைக்கு 'செல்வழி நயனம்' விருதும் நிகழ்வில் வழங்கப்பட்டது.

நிகழ்வில் ஆசி இயம்பல் வழங்கிய கலாநிதி ஆறு.திருமுருகன் தனதுரையில்,

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந் திருவிழா சிறப்பாக நடைபெற்று முடிந்திருக்கின்றது. ஆலயச் சூழலுக்கு மணல் பெற்றுக்கொள்வதை சிலர் தடுத்திருக்கின்றார்கள். வேதனையான விடயம். எதிர்காலத்தில் மணல் வழங்கமாட்டோம் என்று பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது. நல்லூரானுக்கு மணல் வழங்காமல் இருப்பதற்கு தமிழ் மண்ணிலுள்ள தமிழர்களின் பிரதேச சபை தீர்மானித்திருக்கின்றது. இது ஓர் அபசகுணமான செயற்பாடு. எல்லா வற்றையும் நல்லூரான் பார்த்துக்கொள்வான்.– என்றார்.

ஆளுநர் தனது உரையில்,

ஆன்மீகத்தில் ஈடுபாடு குறைந்து செல்வது மாத்திரமல்லாது, ஆன்மீகத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது கூட குறைந்துள்ளது. ஆன்மீகம் வாழ்வியலுக்குத் தேவை. இன்று நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடம் செய்துள்ள பணி பாராட்டுக்குரியது. 5 ஆண்டுகளாக அவர்கள் இதைச் செய்து வருகின்றார்கள். இளம் பிள்ளைகளை இதில் அதிகளவு ஈடுபடுத்தி ஊக்கப்படுத்தியிருக்கின்றார்கள். ஆறு.திருமுருகன் தனது உரையில் குறிப்பிட்டதைப் போல மணல் தொடர்பான தீர்மானங்கள் வருத்தத்துக்குரியன. யாழ்ப்பாணத்தின் அடையாளமாக நல்லூர் கந்தசுவாமி கோயிலே உலகம் எங்கு அடையாளப் படுத்தப்படுகின்றது. நாங்கள் யாழ்ப்பாண மண்ணிலே பிறந்தோம் என்று பெருமை கொள்ளுவதற்கும் அந்த நல்லூரே காரணமாக இருக்கின்றது.

இன்று சைவத்துக்கும், தமிழுக்கும் பல தரப்புக்களாலும் உள்ளக, வெளியக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அந்த அழுத்தங்களில் இருந்து சைவத்தையும், தமிழையும் பாதுகாத்துக் கொள்வதற்கு இவ்வாறான அமைப்புக்கள் காலத்தின் தேவையாக சேவையாற்றுகின்றன.– என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சா.சுதர்சன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.







# பலாலி வடக்கு அ. த. க. பொன்விழா நிகழ்வுகள்





பலாலி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பொன்விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் (26) பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் மாணவர்களது ஓவியங்களைத் திரட்டி கண்காட்சியும் மூலிகை உணவுகள் பற்றிய விழிப்புணர்வை ஊட்டும் காட்சிக் கூடமும் அமைத்திருந்தனர்.

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் ஆகியோரின் ஆக்கத்தில் 'பலாலியின் பொன்னலைகள்' எனும் நூல் வெளியிடப்பட்டது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ் அரச அதிபர், வலிகாமம் வலயக் கல்வி பணிப்பாளர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர், வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர், யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் உள்ளிட்ட சான்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர் .

இந்த நிகழ்வில் 'பலாலியில் பொன் அலைகள்' மலர் பற்றிய மதிப்பீட்டுரையைக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ச.லலீசன் நிகழ்த்தினார்.

# மின்பட்டியல் தொகை செலுத்தல் தொடர்பில் பொறிமுறை தயாரிப்புக் கலந்துரையாடல்





**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை மாவட்டத்தில், மாதாந்த மின்பட்டியலுக்கான தொகையைச் செலுத்தாமையால் மின் இணைப்பைத் துண்டித்தல் மற்றும் பொருத்தப்பட்டிருக்கும் மின்சார சேவைக்கான உபகரணங்களை அகற்றுதல் தொடர்பாக மின்சார சேவை வழங்குநருக்கு பொறிமுறைகளை தயாரிப்பதற்காக மக்கள் மற்றும் பங்குதாரர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பான கலந்துரையாடல் நேற்று (27) நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலானது மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம் ஹேமந்த குமாரவின் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களின் ஆலோசனைகள், கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இந்த ஆலோசனைகள் எதிர்கால பொறிமுறைகளின் வடிவமைப்பில் முக்கிய பங்கு வகிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் நுகர்வோர் மக்கள் பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் நுகர்வோர் விவகாரப் பிரிவின் பணிப்பாளர் யசந்த ரதுவிதான, நுகர்வோர்மக்கள்பொதுப்பயன்பாட்டுஆணைக் குழுவின் சுற்றுச்சூழல், புதுப்பித்தல் மற்றும் வினைத்திறன் பிரிவின் பணிப்பாளர் அமில ராஜபக்ஷ, நுகர்வோர் மக்கள் பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் பொருளாதார ஆய்வுகள் பிரிவின் உதவி பணிப்பாளர் மொஹமட் கிரி, நுகர்வோர் விவகார பிரிவு உத்தியோகத்தர் எம்.இசட்.எம். ரஹான் மற்றும் துறைசார்ந்த அதிகாரிகள், பொது மக்கள் மற்றும் பங்குதாரர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# தொழில் திறவுகோல் பயிற்சி வரணி இடைக்குறிச்சியில்



பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர் யுவதிகளுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் தொழில் திறவு கோல் பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு அண்மையில் இடைக்குறிச்சி கிரா–மச் செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

வரணிவங்கிமுகாமையாளர்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலக மற்றும் மாவட்ட செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், திறன்விருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், இளைஞர் யுவதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜே–341, ஜே–337, ஜே–338, ஜே–339, ஜே - 340, ஜே - 341, ஜே - 342, ஜே - 343, ஜே - 344 ஆகிய கிராம பிரிவு இளைஞர் யுவதிகள் பங்குபற்றினர்.

நிகழ்வில் வளவாளர்களாகப் பிரதேச செயலக மற்றும் மாவட்ட செயலக மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் திறன்விருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# முல்லைத்தீவு பொது வைத்தியசாலையின் தங்குமிடத்துக்கு மெத்தைகள் வழங்கல்!

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளிகள் நலன் கருதி நோயாளிகள் தங்குமிடத்திற்கான ஒரு தொகை மெத்தைகள் இன்று (27)முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

ஊடநயப ளசடையமெய திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் பெரண்டினா நிறுவனத்தின் அனுசரணையில் கேப்பாபிலவு கிங்ஸ்ரார் இளைஞர் கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இவை வழங்கப்பட்டன.

மூன்றாம் கட்டமாக வைத்தியசாலை உதவி பணிப்பாளரிடம் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளா தேவி, முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சம்மேளன உதவி பணிப்பாளர் சுந்தரலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட தேசிய சம்மேளனத்தின் பிரதிநிதி நே.சங்கீதன், பெரண்டினா நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் இளைஞர் கழகங்கள், வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# மஸ்கெலியா நகரில் நடைபெற்ற பாதுகாப்பு, விழிப்புணர்வு நாடகம்

**(மஸ்கெலியா)**

பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு வீதி நாடகம் மஸ்கெலியா நகரில் நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமை மஸ்கெலியா பொது விளையாட்டு திடலில் எல்கேஓ 203 திட்டத்தில் உள்ள இளைஞர்கள் மற்றும் சிறுவர்களால் மஸ்கெலியா நகரில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

நிகழ்வானது சிறுவர்கள் கல்வியின் அவசியம் மற்றும் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தும் நோக்கத்தில் திட்டமிடப் பட்டுள்ளது.

ஒவ்வொரு குழந்தையும் சமுதாயத்துக்குத் தேவையான ஒரு அரிய பரிசு. அவர்களுள் நாளைய உலகத்தை மாற்றக் கூடிய திறன் இருக்கிறது. ஆனால் இன்றும் பல குழந்தைகள் அடிப்படை உரிமைகளுக்கான பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகியவற்றை இழந்துள்ளன. இது ஒரு சலுகை அல்ல ஒவ்வொரு சிறுவர்களுக்கும் கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமை.

ஒரு குழந்தை பாதுகாப்பற்ற சூழலில் வளர்ந்தால் அவர்களின் கனவுகளும் எதிர்காலமும் தடுமாறி விடும். அதே போல் கல்வி என்று வாழும் குழந்தைகள் வறுமை துயரம் மற்றும் சுரண்டலின் பிடியில் சிக்கி விடுகின்றனர். எனவே பாதுகாப்புடன் கல்வியில் இணைந்து தான் குழந்தையின் வாழ்வை உறுதி செய்கின்றன.

இதனை மக்களிடம் நினைவூட்டும் பொருட்டு எங்கள் குழுவால் ஒரு வீதி நாடகம் கவிதை மற்றும் நடைபவனி நடத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு மூலம் குழந்தைகளை பாதுகாக்கும் முக்கியத்துவத்தையும் அனைவருக்கும் கல்வியை அளிக்கும் அவசியத்தையும் சமூகத்திற்கு உணர்த்துவதே எங்கள் நோக்கமாகும்.

சிறுவர் தொழில் இளம் வயது திருமணம் வன்முறை அலட்சியம் போன்றவற்றுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைய வேண்டிய நேரம் இது.

நாம் நினைவில் கொள்ள வேண்டியது ஒன்றே. சிறுவர்களின் நாளைய எதிர்காலம் மட்டுமல்ல, இன்றைய நிஜமும் கூட அவர்கள் பாதுகாப்பாகவும் கல்வியுடன் வாழ்வது. இது எங்கள் உலகத்தை ஒளிமயமாக்கும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தநிகழ்வின்கோட்பாட்டில்இலங்கை கிறிஸ்துவ திருச்சபையின் கீழ் இயங்கும் டிக்கோயா கிறிஸ்து நாதர் திருச்சபை குருவானவர் எஸ் .கே. டேனியல் மற்றும் மஸ்கெலியா சகல பரிசுத்தவான்களின் திருச்சபை அருட் சகோதரர் பி.லோரன்ஸ் எல்.கே.ஓ. 203. திட்ட முகாமையாளர், திட்டப் பணிப்பாளர் மற்றும் இளைஞர்கள், சிறார்கள் பங்கேற்கின்றனர்.

இந்த நிகழ்வுக்கு மஸ்கெலியா பிரதேச சபை மற்றும் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, அரச நிறுவனத்தினர் இணைந்து கொண்டனர்.



# யாழில் கைத்தொழில் மேம்படுத்தல் சபை நிறுவுதல் தொடர்பான கலந்துரையாடல்







யாழ். மாவட்ட கைத்தொழில் மேம்படுத்தல் சபை (District Industrial Promotion Council) நிறுவுதல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட மேலதிகஅரசஅதிபர்க.சிவகரன்தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பல்வேறு கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

அவர்களின் தொழில் முயற்சிகளை இலகுவாக்கும் நோக்கில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் கீழ் வட மாகாண பிரதம செயலாளர் மற்றும் மாவட்ட அரச அதிபர் இணைத் தலைமையில் “District Industrial Promotion Council” அமைப்பை உருவாக்கும் நோக்கில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அதன் கட்டமைப்பு , செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து வட மாகாண பிராந்திய கைத்தொழிற் துறை பணிப்பாளர் தர்மேந்திராவால் விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் செல்வி உ.தர்சினி, மாவட்ட முயற்சியாண்மை ஊக்குவிப்பு பயிற்சி உத்தியோகத்தர் தி.தனஞ்சயன், மக்கள் வங்கி பிரதிநிதிகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக பிரதிநிதி, தொழிற்றுறை திணைக்கள உத்தியோகத்தர்கள் தேசிய தொழில் பயிலுநர் தொழிற் பயிற்சி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதி மற்றும் கைத்தொழிற் துறையுடன் தொடர்புபட்ட நிறுவன பிரதிநிதிகள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# பொத்துவில் தனிக் கல்வி வலயம் அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பு!

## நாடாளுமன்ற உறுப்பினர்களான கோடீஸ்வரன், ஆதம்பாவா எதிர்ப்பு





**(கே. எ. ஹமீட்)**

பொத்துவில் தனிக் கல்வி வலயம் தொடர்பாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பையால் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான கோடீஸ்வரன் மற்றும் ஆதம்பாவா ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான உதுமாலெப்பை, வாசித் மற்றும் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினரும்பொத்துவில் பிரதேச சபை தவிசாளருமான எஸ்.எம்.எம்.முஸாரப் ஆகியோர் பொத்துவிலுக்கான தனிக் கல்வி வலயம் அமைப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுமாறு கோரிக்கை விடுத்தனர்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேயவிக்கிரம அவர்களின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர்களான கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வஸந்த பியதிஸ்ஸ, கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் (26) அம்பாறை கச்சேரியில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை உரையாற்றுகையில்,

பொத்துவில் – உகன பிரதேசங்களுக்கான தனிக்கல்வி வலயங்களை அமைப்பது தொடர்பாக நீண்ட காலமாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அண்மையில் நாடாளுமன்றத்தில் பிரதமர் ஹரினி அமரசூரியவிடம் பொத்துவில் – உகன கல்வி வலயங்கள் தொடர்பாக நான் வாய்மொழி மூலமாக கேள்வி கேட்ட போது, பொத்துவில், உகன கல்வி வலயங்கள் தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநரிடமிருந்து பணிந்துரை கிடைக்கவில்லை எனவும் அவரது கடிதம் கிடைத்தும் பொத்துவில் – உகன பிரதேசங்களுக்கான கல்வி வலயங்களை உருவாக்கும் செயற்பாடுகள் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் என பிரதமர் ஹரினி அமரசூரிய பாராளுமன்றத்தில் பதில் தெரிவித்தார்.

இதன் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் பிரதமரைச் சந்தித்து ஆளுநரின் கடிதம், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கடிதங்களை கையளித்தோம். அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பொத்துவில் – உகன புதிய கல்வி வலயங்கள் தொடர்பாக முன்மொழிவுகளை சமர்ப்பித்து தீர்மானம் ஒன்றைத் தனக்கு அனுப்புமாறு பிரதமர் கோரிக்கை விடுத்தார்.

அதற்கமையவே, இன்று இம்முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு பொத்துவில் – உகன பிரதேசங்களுக்கான புதிய கல்வி வலயங்களை அமைப்பதற்கான பணிந்துரை வழங்கினால் கல்வி அமைச்சு அது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை கோரிக்கை விடுத்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.அப்துல் வாசித் கருத்து தெரிவிக்கையில்,

பொத்துவில் பிரதேசத்துக்கான புதிய கல்வி வலயக் கோரிக்கையானது நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டுள்ள விடயமாகும். எனவே, பொத்துவில் தனிக் கல்வி வலயத்தை உருவாக்குவதற்கான அனுமதியை அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பொத்துவில் பிரதேச சபை தவிசாளருமான எஸ்.எம்.எம்.முஸாரப் கருத்து தெரிவிக்கையில்,

பொத்துவிலுக்கான தனிக் கல்வி வலயம் தொடர்பான விடயம் கடந்த அரசுகளது காலங்களில் கல்வி அமைச்சால் கோரிக்கை விடுக்கப்பட்டு கிழக்கு மாகாண கல்வி அமைச்சும் கிழக்கு மாகாண ஆளுநரும் பரிந்துரை செய்து மத்திய கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட பநாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா கருத்து தெரிவிக்கையில்,

பொத்துவிலுக்கான தனியான கல்வி வலயத்தினை நீங்கள் ஆளும் கட்சியாக இருந்த போது நீங்கள் நிறைவேற்றியிருக்கலாம்தானே என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான முஸாரபிடம் கேள்வி எழுப்பியதுடன் விவாதத்திலும் ஈடுபட்டார். தற்போது இதனை உங்களால் செய்ய முடியாது எனவும் நாங்கள் ஆளுங்கட்சி எனக்கூறி தனது கண்டனத்தையும் ஆதம்பாவா எம்.பி. தெரிவித்தார்.

இதுதொடர்பாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்,

பொத்துவில் தனிக் கல்வி வலயம் அமைப்பதற்கு அனுமதி வழங்க முடியாது எனவும் திருக்கோவில் கல்வி வலயம் பாதிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இவரது கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் பொத்துவில் தனிக் கல்வி அமைப்பதற்கு அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அனுமதி வழங்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பொத்துவில் தவிசாளருமான முஸாரப் கோரிக்கை விடுத்தார்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை கருத்து தெரிவிக்கையில்,

பொத்துவில் – உகன பிரதேச மக்களது நீண்ட கால நியாயமான கோரிக்கையை நிறைவேற்றும் தூய எண்ணத்துடன் தன்னால் இம் முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் நாங்கள் ஒரு போதும் இனவாத ரீதியான செயற்பாடுகளை முன்வைக்கவோ, அங்கீகரிக்கவோ மாட்டோம் எனவும் திருக்கோவில் கல்வி வலயத்துக்கு எதிராக இம்முன்மொழிவுகள் முன்வைக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

பொத்துவில் கல்வி வலயம் தொடர்பாக நீண்ட நேரமாக நடைபெற்ற விவாதத்தின் பின்னர் பிரதி அமைச்சர் வசந்த பீரிஸ் கருத்து தெரிவிக்கையில்,

பொத்துவில் – உகன கல்வி வலயங்கள் அமைப்பது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பையால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவானது நியாயமானதாக உள்ளது. இப்புதிய கல்வி வலயங்களை உருவாக்குவது தொடர்பாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகளும் ஒன்றிணைந்து ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும் என்று தெரிவித்தார்.

# வட பிராந்திய பிரதி அஞ்சல் மா அதிபராக பதவி உயர்வு பெற்றுள்ளார் நிவேதிதா!



நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் கடந்த இரண்டு வருடங்களாக உதவி பிரதேச செயலாளராக மற்றும் பிரதேச செயலாளராக பணியாற்றிய திருமதி நிவேதிதா கேதீஸன் வடபிராந்திய பிரதி அஞ்சல் மா அதிபராக பதவியுயர்வு பெற்று மாற்றலாகி சென்றுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச செயலாளர் நிவேதிகா கேதீசனுக்கு இலங்கை பெண்கள் பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட பிரதேச மகளிர் விவகார அமைப்புக்களால் நேற்று (27) பிரியாவிடை நிகழ்த்தப்பட்டது.






# நோட்டன் ஏழு கன்னி மலைத்தொடரில் விமான விபத்து நடந்து 51 வருடங்கள்!

**(மஸ்கெலியா)**

நோட்டன் பகுதியில் உள்ள ஏழு கன்னி மலைத்தொடரில் 191 பேருக்கு மரணத்தை ஏற்படுத்திய பாரிய விமான விபத்து இடம்பெற்று 51 வருடங்கள் பூர்த்தி ஆகின்றன.

1974 ஆம் ஆண்டு டிசெம்பர் 04 ஆம் திகதி இந்தோனேசியா புரோவெயார் விமான நிலையத்தில் இருந்து புனித மக்கா யாத்திரை பயணிகள் மற்றும் பணியாளர்கள் உட்பட 191 பேருடன் மக்கா நோக்கி பயணித்த விமானம் இரவு 10 மணியளவில் நோட்டன் பிரிஜ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திபர்டன் ஏழு கன்னி மலைத் தொடரில் மோதுண்டு, அதில் பயணித்த 183 பயணிகளும் அதன் பணியாளர்கள் 09 பேரும் அவ்விடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்தோனேசியா புரோவெயார் விமான நிலையத்தில் இருந்து மக்கா நோக்கி பயணித்த டிசி 08 ரக இந்தோனேசியா விமானம் 36000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த நேரத்தில் விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்குவதற்கு விமானியால் கட்டுநாயக்க கட்டுப்பாட்டறையை தொடர்பு கொண்ட போது, 4000 அடிக்கு தாழ்த்துமாறு பணிக்கப்பட்டது.

அதன்படி பயணித்தபோது விமானத்தின் வலது பக்க வால் பகுதி ஏழு கன்னி மலையில் மோதுண்டதால் விமானம் வெடித்து சிதறியது. அதில் பயணித்த அனைவரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நோர்வூட் காசல்ரீ நீர் தேக்கத்தின் மேலாக பயணித்த இந்தோனேசியா விமானம் விபத்துக்குள்ளாகி அனைவரும் மரணமடைந்த நிலையில் அதில் பயணம் செய்த ஒரு பணிப்பெண் ஒருவரது சடலம் மட்டும் அவரது காதலரால் ஹெலிகொப்டர் மூலமாக இந்தோனேசியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்குள்ளான விமானத்தின் சக்கரம் ஒன்று இன்றும் ஞாபகார்த்தமாக நோட்டன் பிரிஜ் விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் முன் பகுதியில் காட்சி படுத்தப்பட்டுள்ளது.

அதில் விமானத்தில் பயணித்த விமானிகள் மற்றும் பணியாளர்களின் பெயர் அதில் பொறிக்கப்பட்டுள்ளது.



# பரவி பாஞ்சான் குள அபிவிருத்தி தொடர்பில் மீளாய்வு நடவடிக்கை

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

திருகோணமலை மாவட்ட தம்பல காமம் பிரதேச செயலக பிரிவின் முள்ளிப்பொத்தானை பரவி பாஞ்சான் குள புனரமைப்பு தொடர்பிலான கள நடவடிக்கைகள் நேற்று (27) இடம்பெற்றன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையிலான கள நடவடிக்கையில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன, நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் குள புனரமைப்பு அபிவிருத்தி தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகள் என பல விடயங்கள் இதன் போது ஆராயப்பட்டன. இக் குளத்தின் மூலம் விவசாயிகள், நன்னீர் மீன் பிடி தொழிலாளர்கள் என பலரும் நன்மையடைவர்.

இதில் விவசாய சம்மேளன பிரதிநிதிகள், நன்னீர் மீன் பிடியாளர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்தக் குள அபிவிருத்தி தொடர்பிலான நடவடிக்கைகளை தேசிய மக்கள் சக்தியின் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன கேட்டறிந்து கொண்டார்.

# போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த தம்பதியினர் கைது!

**(க.கிஷாந்தன்)**

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த தம்பதியினர் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஹட்டன் பொலிஸ் நிலையத் தலைமை அதிகாரி தெரிவித்தார்.

கினிகத்தேன, பொல்பிட்டிய – களுகல பகுதியல் உள்ள வீதி சோதனை சாவடியில் வைத்தே இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தர்கா நகரை சேர்ந்த 25 வயது சந்தேக நபரும், அவரின் 20 வயதான கர்ப்பிணி மனைவியும் தர்கா நகரில் இருந்து நுவரெலியா நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர்.

இந்த நிலையில் களுகல பகுதியில் உள்ள பொலிஸ் வீதி சோதனை சாவடியில் இவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டவேளை, அவர்கள் மறைத்து வைத்திருந்த போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.



50 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 50 கிராம் ஹெரோயின் என்பனவே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

ஈசி கேஸ்மூலம் பணத்தை பெற்ற பின்னர் ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் போதைப் பொருளை வைத்துவிட்டு அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சந்தேக நபர் தெரியப்படுத்துவார் என்றும் அவர்கள் வந்து அதனை எடுத்துக் கொள்வர் என்றும் தெரியவந்துள்ளது.

இவர்கள் இதற்கு முன்னரும் போதைப் பொருள் விநியோகம் தொடர்பில் பல பொலிஸ் நிலையங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி தடுப்பு காவல் உத்தரவைப் பெற்று, இவர்களிடம் போதைப் பொருள் வாங்கும் நபர்களை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# எவ்வளவு நெருக்கடி வந்தாலும் கவலையில்லை: விவசாயிகளை காப்பேன் என்கிறார் பிரதமர் மோடி

நாட்டில் உள்ள சிறு நிறுவனங்கள், விவசாயிகளை பாதுகாக்கும் விடயத்தில் எவ்வளவு நெருக்கடிகள் வந்தாலும் கவலையில்லை என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியாக தெரிவித்தார்.

உலக நாடுகளுக்கு அதிகபட்ச வரி விதித்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இந்தியாவுக்கு 25 சதவீத வரியை விதித்தார். உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதால், இந்தியாவுக்கு கூடுதலாக 25 வீத வரியை அறிவித்தார்.

இதற்கான உத்தரவில் நேற்று முன்தினம் ட்ரம்ப் கையெழுத்திட்டார். இதையடுத்து அமெரிக்காவுக்கு இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு மொத்தமாக 50 சதவீத வரி விதிக்கப்படுகிறது.

இந்நிலையில், குஜராத் மாநிலம்



அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

அப்போது பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

“உலகளவில் தற்போது பொருளாதார ரீதியாக அரசியல் செய்வதில் ஒவ்வொருவரும் பரபரப்பாக இருக்கின்றனர். ஆனால், அகமதாபாத் மண்ணில் இருந்து ஒன்று சொல்கிறேன். மகாத்மா காந்தியின் மண்ணில் இருந்து ஒன்று சொல்கிறேன்.

என்னுடைய சிறு நிறுவனங்களைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள், சிறிய கடை வைத்துள்ள சகோதர, சகோதரிகள், சிறு விவசாய சகோதர, சகோதரிகள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு மீண்டும் மீண்டும் உறுதி அளிக்கிறேன். உங்களுடைய நலன், உணர்வுகள்தான் இந்த மோடிக்கு முதன்மையானது.

எனது நாட்டில் சிறு நிறுவனங்கள் வைத்திருப்பவர்கள், விவசாயிகளைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறேன். அதற்கு தடையாக எத்தனை நெருக்கடி வந்தாலும், அவர்களின் வாழ்வாதாரத்தை விட்டுத்தர மாட்டேன். அவர்களுக்கு சிறு கஷ்டம் வருவதை என்னுடைய தலைமையிலான அரசு பொறுத்துக் கொள்ளாது. எத்தனை நெருக்கடி வந்தாலும், அவற்றை தாங்கும் வலிமையை அதிகரித்து கொண்டே இருப்போம்.” என்று தெரிவித்துள்ளார்.

# நாம் நீண்ட போர்களுக்கு தயாராக இருக்க வேண்டும்

## மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவிப்பு

புதிய தொழில்நுட்பங்கள் போரின் தன்மையை மாற்றியமைத்துள்ளதால், குறுகிய மற்றும் நீண்ட போர்களுக்கு இந்தியா தயாராக இருக்க வேண்டும் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

மத்தியப் பிரதேசத்தில் நடைபெற்ற இராணுவ நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர்,

“வீரர்களின் எண்ணிக்கையும் ஆயுதங்களும் மட்டுமே இனி போதுமானதாக இருக்காது. சைபர் யுத்தம், செயற்கை நுண்ணறிவு, ஆளில்லா வான்வழி ட்ரோன்கள் மற்றும் செயற்கைக்கோள் அடிப்படையிலான கண்காணிப்பு ஆகியவையே எதிர்காலப் போர்களை வடிவமைக்க உள்ளன.



புதிய தொழில்நுட்பங்கள் போரின் தன்மையை மாற்றியமைத்துள்ளதால், குறுகிய மற்றும் நீண்ட போர்களுக்கு இந்தியா தயாராக இருக்க வேண்டும். துல்லியமாக வழிநடத்தப்படும் ஆயுதங்கள், நிகழ்நேர நுண்ணறிவு மற்றும் தரவு சார்ந்த தகவல்கள் ஆகியவையே இப்போது எந்தவொரு யுத்தத்திலும் வெற்றிக்கான அடித்தளமாக மாறிவிட்டன.

நவீன போர்கள் இனி நிலம், கடல் மற்றும் வான்வெளியுடன் மட்டும் கட்டுப்படுத்தப்படாது. இனி அவை விண்வெளி மற்றும் சைபர்ஸ்பேஸ் வரை விரிவடையும். செயற்கைக்கோள் அமைப்புகள், செயற்கைக்கோள் எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் விண்வெளி கட்டுப்பாட்டு மையங்கள் ஆகியவை அதிகாரத்தின் புதிய கருவிகளாகும். தொழில்நுட்பம், ஒரு புதுமையை முழுமையாகப் புரிந்துகொள்ளும் நேரத்தில், இன்னொன்று உருவாகி, போரின் போக்கையே முற்றிலுமாக மாற்றும் அளவுக்கு உலகம் வேகமாக முன்னேறி வருகிறது.” என்று தெரிவித்தார்.



# வேடனுக்கு முன்பிணை

சொல்லிசை பாடகர் வேடனுக்கு நிபந்தனைகளுடன் கேரள நீதிமன்றம் முன்பிணை வழங்கியுள்ளது.

தனது சொல்லிசை இசைப் பாடல் மூலம் இந்திய அளவில் பெரிய ரசிகர் கூட்டத்தையே உருவாக்கி வைத்திருப்பவர் கேரளாவைச் சேர்ந்த இசைக்கலைஞர் வேடன்.

வேடன் என்ற ஹிரன்தாஸ் முரளி மீது திருமணம் செய்து கொள்வதாகக் கூறி இளம் மருத்துவர் ஒருவரை பலமுறை அத்துமீறல் செய்தார் என கேரளாவில் வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில், அவர் அண்மையில் கைது செய்யப்பட்டார். 30 வயதான வேடன், 2021 முதல் 2023 வரை பலமுறை அவரை அத்துமீறல் செய்ததாக இளம் மருத்துவர் குற்றம் சாட்டி இருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, காதலில் தோல்வியடைந்தவர்கள் எப்போதும் மற்றொருவரின் எதிர்காலத்தைப் பாழாக்குகிறார்கள் என கேரள நீதிமன்றம் தெரிவித்துள்ளது.





# காசாவிற்கான திட்டங்கள் தொடர்பில் அமெரிக்கா - பிரித்தானியா கவனம்

போருக்குப் பின்னர் காசாவிற்கான திட்டங்கள் குறித்து விவாதிக்க, பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டோனி பிளேர், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் வெள்ளை மாளிகை சந்திப்பில் கலந்து கொண்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவில் 'போருக்குப் பின்னர்', என்ற மிக விரிவான திட்டத்தை அமெரிக்கா உருவாக்கி வருவதாக மத்திய கிழக்கு தூதர் ஸ்டீவ் விட்காஃப் கூறியுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

இருப்பினும், இந்த சந்திப்பு பற்றி வேறு தகவல்கள் வெளியிடப்படவில்லை.

2007 இல் பதவியில் இருந்து விலகிய பிறகு, பிளேர் சில ஆண்டுகள் மத்திய கிழக்கு தூதராக பணியாற்றினார்.

இதேவேளை அமெரிக்காவின் இந்த திட்டம் குறித்து இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சரிடம் வினவிய போது, அதுபற்றித் தெரியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இஸ்ரேலிய இராணுவம் காசா நகரத்தைக் கைப்பற்றுவது தவிர்க்க முடியாதது என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இஸ்ரேலின் அண்மைய தாக்குதல் முனைப்புகள் காரணமாக, ஆயிரக்கணக்கான காசா மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளனர் என்று சர்வதேச செய்திகள் கூறுகின்றன.

# இஸ்ரேல் - ஹமாஸ் இடையில் நடைபெறும் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

## பாப்பரசர் 14 ஆம் லியோ தெரிவிப்பு



இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என பாப்பரசர் 14 ஆம் லியோ தெரிவித்துள்ளார்.

நிரந்தர அமைதியை ஏற்படுத்த வேண்டும் எனவும் பணயக் கைதிகளை விடுவித்து, உதவிகளை வழங்க வேண்டும் எனவும் இரு தரப்புக்கும் வலுவான வேண்டுகோள் விடுப்பதாக பாப்பரசர் கூறியுள்ளார்.

அதிகமான அளவிற்குப் பயங்கரவாதம், அழிவு மற்றும் மரணத்தை ஏற்படுத்தியுள்ள போரானது விரைவில் நிறுத்தப்பட வேண்டும் என தாம் கேட்டுக்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புனித பூமியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர் மற்றும் மோதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் பன்னாட்டு சமூகத்திற்கும் ஒரு வலுவான வேண்டுகோள் விடுப்பதாக அவர் தெரிவித்தார்.

மனிதாபிமான உதவிகளை மக்கள் பாதுகாப்பாக அணுகுவதை எளிதாக்க வேண்டும் என்றும், மனிதாபிமான சட்டம் முழுமையாக மதிக்கப்பட வேண்டும் எனவும் பாப்பரசர் வலியுறுத்தியுள்ளார்.

# 200 சதவீதம் வரி விதிக்கப் போகின்றேன்; சீனாவுக்கு டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை

அரிய வகை காந்தங்களை அமெரிக்காவுக்கு வழங்காவிட்டால், 200 சதவீதம் வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் சீனாவுக்கு மிரட்டல் விடுத்துள்ளார்.

தானியங்கி வாகனங்கள், மின்னணு சாதனங்கள் மற்றும் பாதுகாப்பு துறை உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் மிக முக்கியமாக அரிய வகை காந்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த முக்கிய கனிமங்களின் உற்பத்தியில், சீனா ஏகபோக உரிமையை கொண்டுள்ளது. இதன் காரணமாக, உலக வர்த்தகத்தில் தனி செல்வாக்குடன் சீனா உள்ளது.



இந்நிலையில், அரிய வகை காந்தங்களின் ஏகபோக உரிமையை தன் கட்டுப்பாட்டில் புத்திசாலித்தனமாக சீனா வைத்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதே வேளையில், அமெரிக்காவுக்கு இந்த அரிய வகை காந்தங்களை வழங்கவில்லை என்றால், சீனா மீது 200 சதவீதம் வரை வரி விதிக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து டொனால்ட் ட்ரம்ப் தெரிவிக்கையில்,

"அமெரிக்கா - சீனா இடையே சிறப்பான உறவு இருந்தாலும், சீனாவை விட அமெரிக்கா அதிக செல்வாக்கை கொண்டுள்ளது. அவர்களை விட எங்களிடம் மிகப்பெரிய மற்றும் சிறப்பான அஸ்திரங்கள் உள்ளன. நான் அந்த அஸ்திரங்களை பயன்படுத்தினால், அது சீனாவையே அழித்து விடும். ஆனால், நான் அந்த அஸ்திரங்களை உபயோகிக்கப் போவதில்லை.

அரிய வகை காந்தங்களை அமெரிக்காவுக்கு சீனா வழங்க வேண்டும். அவர்கள் அவ்வாறு வழங்கவில்லை என்றால், நாம் அவர்களிடம் 200 சதவீதம் வரி அல்லது அதற்கு ஈடாக எதையாவது அறவிட வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

கனடா முரசு
வியாழக்கிழமை 28/08/2025


சமூக ஊடகப் பயன்பாட்டுக்கு தடை விதிக்க கோரும் பெற்றோர்



02



# ஜேர்மனி – கனடா இடையில் முக்கிய பாதுகாப்பு ஒப்பந்தம்

**ஜேர்மனியும் கனடாவும் முக்கிய கனிமங்கள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தவுள்ளன.**

**ஜேர்மன் சேன்சலர் ஃப்ரெட்ரிக் மெர்ஸ் மற்றும் கனடா பிரதமர் மார்க் கார்னி, இரு நாடுகளும் பாதுகாப்பு மற்றும் முக்கிய கனிமங்கள் தொடர்பான ஒத்துழைப்பை மேம்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர்.**

**இதன்மூலம், ஜேர்மனி - கனடா இடையேயான உறவுகள் மேலும் வலுப்பெறுகின்றன என மெர்ஸ் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்கா விதித்துள்ள வரி மற்றும் ரஷ்யா, சீனாவை சார்ந்த தொழில்துறைகளி விளக்க முயற்சிக்கும் சூழலில், இந்த ஒத்துழைப்பு உருவாகியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில், lithium, rare earth elements, copper tungsten, gallium, germanium மற்றும் nickel போன்ற உலோகங்களை மேம்படுத்தும் திட்டம் உள்ளது.

இவை இராணுவ உபகரணங்கள், மின்சார வாகனங்கள், quantum computing போன்றவற்றிற்கு முக்கியமானவை.

ஜேர்மனி, முக்கிய கனிமங்களுக்காக சீனாவை சார்ந்திருப்பதை குறைக்க விரும்புகிறது. கனடாவில் 200 இற்கும் மேற்பட்ட சுரங்கங்கள் உள்ளன. பல முக்கிய உலோகங்களை எடுக்கும் திறன் கொண்டவை.

மேலும், கனடா தனது நீர்மூழ்கி கப்பல் படையை புதுப்பிக்க திட்டமிட்டுள்ளது. ஜேர்மனியின் Thyssenkrupp Marine Systems நிறுவனம் இந்த திட்டத்தில் முக்கிய பங்கு வகிக்க வாய்ப்பு உள்ளது.





# சமூக ஊடகப் பயன்பாட்டுக்கு தடை விதிக்க கோரும் பெற்றோர்



கனடாவில் சமூக ஊடகப் பயன்பாட்டுக்கு கட்டுப்பாடுகளை விதிக்குமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அன்பிளக்ட் கனடா என்ற பெற்றோர் அமைப்பினால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சமூக ஊடகங்களை அணுகுவதைத் தடுக்கும் புதிய விதிமுறைகளைக் கோரியுள்ளது. மனநலம் மற்றும் ஒன் லைன் பாதுகாப்பு குறித்து எழுந்துள்ள சிக்கல்களின் அடிப்படையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிஜ உலகில் சிறுவர்களுக்கு காணப்படும் பாதுகாப்பு இணையத்தில் கிடையாது என பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இணையத்தில் புகையிலை உற்பத்திகள், போதைப் பொருட்கள் என்பனவற்றை கொள்வனவு செய்யவும் ஆபாச படங்களை பார்வையிடம் முடியும் என தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் நிறுவப்பட்ட அன்பிளாக்ட் கனடா, 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சமூக ஊடகங்களைத் தடை செய்ய வேண்டுமென அரசாங்கத்திடம் கோரியுள்ளது.




# பிரித்தானிய கணவரை கனடா வழியாக கடத்த முயன்ற அமெரிக்க பெண் கைது

பிரித்தானிய கணவரை கனடா வழியாக அமெரிக்காவுக்குள் கடத்த முயன்ற அமெரிக்கப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏப்ரல் மாதம் 1ஆம் திகதி, கனடாவிலிருந்து ஒருவர் அமெரிக்காவுக்குள் நுழைந்ததாக அமெரிக்க எல்லை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது.

ஆனால், அவர்கள் அவரைத் தேடியும் கிடைக்கவில்லை. இதற்கிடையில், கனடாவுக்குள் எல்லையருகே ஒருவர் நடமாடுவதைக் கண்ட கனேடிய பொலிஸார் அவரைப் பிடித்து Roosville என்னுமிடத்திலுள்ள எல்லைப் பகுதிக்கு அமெரிக்க அதிகாரிகளிடம் கொண்டு செல்ல, அவர்கள் தாங்கள் தேடும் நபர் அவர்தான் என்பதை உறுதி செய்துள்ளார்கள்.

சற்று நேரத்தில் ஒரு பெண் அமெரிக்காவிலிருந்து கனடாவுக்குள் நுழைய முயல, அவரை விசாரித்த அதிகாரிகளுக்கு, அவரது கணவர் தான் தாங்கள் பிடித்துவைத்திருக்கும் நபர் என்பது தெரியவந்துள்ளது.

அந்த அமெரிக்கப் பெண்ணின் கணவர் ஒரு பிரித்தானியர். அவரை கனடா வழியாக அமெரிக்காவுக்குள் கடத்த திட்டமிட்டுள்ளார் கலிபோர்னியாவைச் சேர்ந்த அந்தப் பெண்.

அதன்படி அவர் தனது கணவரை கனடாவில் விட்டுவிட்டு, எல்லை தாண்டி தான் மட்டும் அமெரிக்காவுக்குள் நுழைந்துள்ளார்.

அவர் நடந்தே அமெரிக்காவுக்குள் நுழைந்ததும், அவரை காரில் அழைத்துச் சென்றுவிடலாம் என்பது அந்தப் பெண்ணின் திட்டம்.

ஆனால், இருவரும் அதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டதால் அவர்கள் திட்டம் நிறைவேறாமலே போய்விட்டது.

கணவரை அமெரிக்காவுக்குள் கடத்த முயன்ற அந்தப் பெண்ணுக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

அத்துடன், சிறையிலிருந்து அவர் விடுவிக்கப்பட்ட பின்னரும் மூன்று ஆண்டுகள் அதிகாரிகளின் கண்காணிப்பில் இருப்பார் அவர்.

மேலும், அவருக்கு 250,000 டொலர்கள் அபராதமும் விதிக்கப்படக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது.





# ஐரோப்பாவிற்கான விஜயத்தை நிறைவு செய்தார் கனடிய பிரதமர்

கனடிய பிரதமர் மார்க் கார்னி ஐரோப்பிய நாடுகளுக்கான தனது பயணத்தை நிறைவு செய்துள்ளார்.

இறுதியாக லாட்வியாவிற்கு விஜயம் செய்து அங்கு நிலை கொண்டுள்ள கனடிய படையினரை பிரதமர் சந்தித்துள்ளார்.

கனடிய பிரதமரின் ஐரோப்பிய விஜயமானது பாதுகாப்பு விவகாரங்களை மையப்படுத்தியதாக அமைந்திருந்தது என தெரிவிக்கப்படுகின்றது.

லாட்வியாவின் ஆதாசி இராணுவ தளத்தில் நிலை கொண்டுள்ள படையினரிடம் கார்னி பேசியுள்ளார்.

ஐரோப்பாவின் கிழக்கு எல்லையில் ரஷ்ய ஆக்கிரமிப்பை தடுக்கும் நோக்கில், பலநாட்டு படைகள் லாட்வியாவில் நிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, உக்ரைக்கு இரண்டு பில்லியன் டொலர் இராணுவ உதவிகளை வழங்குவதாக அண்மையில் கனடா அறிவித்திருந்தது.

மேலும் இந்த உதவியில் ட்ரோன்களுக்காக 220 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# டொராண்டோவில் சிறுவன் மீது துப்பாக்கிச் சூடு; இருவர் கைது

கனடாவின், டொராண்டோ ஸ்கார்பரோவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 14 வயது சிறுவன் காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லாரன்ஸ் அவென்யூ கிழக்கு மற்றும் வார்டன் அவென்யூ பகுதியில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

14 வயது சிறுவன் ஒருவன் பஸ்ஸில் ஏறியபோது, இரு ஆண்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப்போது, சந்தேக நபர்களில் ஒருவர் துப்பாக்கியால் சிறுவனை நோக்கி பல முறை சுட்டுள்ளார் என கூறப்படுகிறது.

சிறுவனுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. இரு சந்தேக நபர்களும் அவரைத் தொடர்ந்து சென்று உடல் ரீதியாக தாக்கியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி உயிருக்கு ஆபத்து இல்லாத காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.



இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில், விக்டோரியா பார்க் அவென்யூ மற்றும் பின்ச் அவென்யூ கிழக்கு பகுதியில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.